
ஒரே ஒரு கவிதை
செள பீ . தாமஸ்

# ஒரே ஒரு கவிதை

ஜெள பீ . தாமஸ்

என் அன்பு மனைவிக்கு இந்நூல் சமர்ப்பணம் .

அணிந்துரை

மா. ஜெய பால கிருஷ்ணன் M.A., M.Com., B.Ed., M.Phil.,

அன்பிற்கினிய தோழர் செள பீ . தாமஸ் அவர்கள் " ஒரே ஒரு கவிதை " என்னும் நூலில் தனது வித்தியாசமான பார்வையில் கவிதைகளை அள்ளி அள்ளி தந்துள்ளார் .

ஆசிரியருக்கு அது " ஒரே ஒரு கவிதை " தான் . ஆனால் நமக்கோ அது பல கவிதைகளில் சமுதாய சீர்திருத்தக் கருத்துக்களைப் புகுத்தி அற்புதமான கருத்துருவான கற்பனை வளத்தைக் காண முடிகிறது .

இந்தக் கவிதை நூலை தனது மனைவிக்கு சமர்ப்பித்துள்ளமை போற்றுதலுக்குரியது .

எழுதாத கவிதையில் " தமிழகக் கலப்பையும் எனது பேனாவும் " என்னே ! கற்பனை .

" நீ நிம்மதியாய் எனக்கு முன்னால் " நம் ஆணாதிக்க சமூகத்தில் பெரும்பாலும் " பூவும் பொட்டும் " என்ற கருத்துக்கு மாறானது இக்கவிதை . அழகான கவிதை , அற்புதமான சிந்தனை . கவிஞர் இங்கே முற்போக்குவாதியாக மிளிர்கிறார் .

தாத்தாவும் தாலாட்டுப் பாடி கேட்டதில்லை யாரும் , அருமையான பாடல் .

அதுமட்டுமல்ல " சந்தோசத்திலும் விரிவடையும் " , " எழுதுகோலே நெம்பு கோலாகும் " , " கோபம் ஒரு பாய்மம் " இயற்பியல் இயல்பாகவே வருகிறது கவிஞருக்கு .

" தாய் " என்ற கவிதையில் ஓர் எழுத்து மாறுவதால் தமிழின் மாட்சிமையை வெளிப்படுத்துகிறார் . கவிஞரின் இலக்கிய நுட்பம் பாராட்டுக்குரியது .

" நிர்வாணம் " என்ற தலைப்பில் கிறிஸ்தவ தலித் பெண்ணாக கவிஞர் மாறியது சிறப்பு . அதே நேரம் மனதில் அழுக்கையும் அழுத்தத்தையும் அம்பலமாக்குகிறது கவிதை .

" சாலையில் காலணி " என்ற கவிதையில் மிக மிகச் சாதாரண விசயத்தை அற்புதமான கண்ணோட்டத்துடன் கையாளுகிறார் . காலணியை குழந்தையின் காலாகவே பார்ப்பது ஆழமான கற்பனை .

" முகமூடி " கவிதையும் அப்படியே . சார்லி சாப்ளினை நினைவுபடுத்துகிறார் .

" வழிபாடு " என்ற கவிதையில் பிரார்த்தனை எப்படி இருக்க வேண்டும் என்றும் அக்கவிதையின் இறுதியில் " எங்கிருந்தோ ஒரு பறவையின் தூவல் " " பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம் " ஈரடி வேந்தன் அய்யன் வள்ளுவனை திரும்ப நோக்கும் விதத்தில் மிகச் சிறப்பாக அமைந்துள்ளது .

காலம் செல்லச் செல்ல மறதி ஒன்றே மன்னிக்கும் என்பது தான் உண்மை . " மன்னிப்பு " என்ற கவிதை நல்ல உளவியல் கருத்து .

" நானென்ன செய்ய " என்ற கவிதையில் கவிஞரின் மனப்போராட்டம் நன்கு புரிகிறது . இறுதியில் இனி வாழ்வெல்லாம் சுகமே என்று அழகாக நிறைவு செய்கிறார் .

" என்னிருப்பு " என்ற கவிதையில் திருவோடு அல்ல என்னிதயம் அது அட்சயப் பாத்திரம் , கவிஞரின் பெருந்தன்மையைக் காட்டுகிறது .

" பலூன் " கவிதை சிறப்பிலும் சிறப்பு .

" கண்ணீரஞ்சலி " யில் மிக அழுத்தமான கருத்தை மிகத் தைரியமாக வார்த்தையில் எதார்த்தத்தை படம் பிடித்துக் காட்டுகிறார் .

பிறருக்குத் தான் நாம் எழுதியிருப்போம் ஆனால் தமக்குத் தாமே எழுதியது கற்பனையா ? சிந்தனையா ? தைரியமா ? கவிதைத் திமிரா ? என்று வாசகரைத் திணறடிக்கிறார் .

ஒட்டு மொத்தமாக " ஒரே ஒரு கவிதை " சங்கிலித் தொடராக தவழ்ந்து விளையாடுகிறது.

எளிய வார்த்தைகளின் வலைப்பின்னலில் கட்டிப்போட்டு ஒரு சுகானுபவத்தை நம்மில் உணர்த்துகிறார் கவிஞர் .

இலங்கைப் பத்திரிக்கைகளில் இவரது கவிதைகள் வெளிவந்து பாராட்டு பெற்றது குறிப்பிடத்தக்கது .

இக்கவிதைத் தொகுப்பு ஒரு கருத்துக் கருவூலமாக களஞ்சியமாகக் களத்திலே வெற்றி வாகை சூடும் என்பதில் ஐயமில்லை .

வாழ்த்துகளுடன் ,

மா . ஜெய பால கிருஷ்ணன் .

மதிப்புரை

Dr. சா . ரோஸ்லின் சில்வா M.A., M.Phil., Ph.D.,

சௌ பீ . தாமஸ் அவர்களின் " ஒரே ஒரு கவிதை " எனும் நூலில் தன் கவிதை பயணத்தைச் சிறப்பாக பயணித்திருக்கிறார் .

தமிழ்ச் சூழலில் கவிதை எழுதுதல் , கவிதை வாசித்தல் ஆகிய இரண்டுமே அதன் தளத்திலிருந்து சற்று விலகி நடப்பதைக் காண முடிகிறது .

ஆனால் ஆசிரியர் தன் நிலையிலிருந்து விலகாது தனக்கென பாடுபொருளோடும் , மொழியாடலோடும் வாழ்க்கை பயணத்தினை கவிதையாக்கியிருப்பது அருமை .

கவிதை எழுதவில்லை என்று சொல்லி கவிதையை எழுதி விட்டார் . சொல்லாமல் சொல்லிவிட்டார் . நல்ல சொல்லாடல் .

" கழுதை " கவிதையில் " என்னைப் பார் யோகம் வரும் " பகடி செய்வது பகுத்தறிவு சிந்தனை .

" அன்பு என்பது வார்த்தையல்ல " என்னும் கவிதையில் " நாய் வலது புறம் வாலாட்டியது " ஏன் என்பது சிந்தனைக்குரியது .

" கரும்புச் சாறு ' என்ற கவிதையில் மனித நேய உணர்வை புரிந்து கொள்ள முடிகிறது . நிலையில்லாத உலகில் எதைக் கொண்டு போகப் போகிறோம் ? என்பதை புரிந்து கொண்டால் சொர்க்கம் வேறெங்குமில்லை .

" பருவ மாற்றமில்லாமல் உருவ மாற்றமடைந்த " என்ற கேள்விக்கு பதில் என்ன கூற முடியும் ?

தனியுணர்வும் பொது உணர்வும் ஒன்றிலிருந்து ஒன்று பிரிவுபடாதவை என்பதை பல வரிகள் உண்மையாக்குகிறது .

" அரசாங்கம் அச்சடிச்ச காகிதம் " படிப்பவர்க்கு பல அர்த்தங்களைக் கொடுக்கும் .

கவிதைகளின் உருவ வாக்கியங்கள் மட்டுமல்ல , இயல்பு வாக்கியங்களும் அழகு சேர்க்கும் என்பதை இத்தொகுப்பு பிரதிபலிக்கிறது .

இவருடைய கவிதைகள் எளிய விளக்கத்தில் சிக்காத சொற்களின் படைப்பு .

" கல்லெறிபட்ட விபச்சாரிக்குக் கூட " என்ற வரியில் சமுதாயத்தின் மீதான கோபமும் அவரது பார்வையில் பெண்ணியமும் வெளிப்படுகிறது .

" பலூன் " என்ற கவிதையில் குழந்தைகளின் உணர்வுகளை நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது . சாதாரண விசயத்தை நுட்பமாக கையாளுகிறார் . குழந்தைகளின் எண்ணங்கள் பவித்திரமானது என்பதற்கு இக்கவிதை ஒரு சான்று . குழந்தைகள் ஈகோ பார்ப்பதில்லை என்பது சரியானதே . உண்மையும் கூட .

" நானொரு கவி " என்ற கவிதையில் எழுத்தாளனின் இன்றைய நிலையை நன்றாகப் புரிந்து கொள்ள முடிகிறது . அப்படி இருக்கிறது என்பது நிஜம் .

எல்லாம் நிறைவேறிற்று " என்ற வரி முடிவல்ல .

கவிஞரின் அடுத்த புதிய கவிதை பயணத்திற்கு உயிர்த்தெழ வாழ்த்துகள் .

என்றென்றும் அன்புடன் ,

சா . ரோஸ்லின் சில்வா .

என்னுரை

அங்கொன்றும் இங்கொன்றுமாய் எழுதிய ஒரு சில கவிதைகள் ஒரே கவிதையாய் இருந்தால் எப்படியிருக்கும் என்பது தான் இந்த வெளிப்பாடு . எழுதுவதென்னவோ எல்லோருக்கும் பிடித்தமான ஒன்று . அன்றாட வாழ்வில் காணும் யாவும் கரு தான் . கரு உருப்பெற்றால் கவிதையாகவோ கதையாகவோ காவியமாகவோ வெளிவரும் .

மகிழ்விலும் துக்கத்திலும் ஏற்படும் உள்ளத்தின் எழுச்சி சிறிது நேரத்தில் சலனமற்று காணப்படும் . அந்நிலையே மோன நிலை . மோனம் மோகனமாகும் பொழுது நெஞ்சில் இனிக்கும் . இனிக்கும் வேளையில் எங்கிருந்தோ குழலோசைக் கேட்கும் .

அப்படித் தான் இந்தக் கவிதைகளும் .

அணிந்துரை வழங்கிய தோழர் திரு . மா. ஜெய பால கிருஷ்ணன் அவர்களுக்கும் , பல பணிகளுக்கும் ஊடாக பொறுமையாய் படித்து மதிப்புரை வழங்கிய திருமதி Dr. சா . ரோஸ்லின் சில்வா அவர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் .

இந்நூல் வெளிவர பெரிதும் காரணமாயிருந்த அன்பு நண்பன் நாமக்கல் மாவட்டம் பள்ளி பாளையத்தைச் சார்ந்த தையல் கலைஞன் இளங்கவி திரு . பு . மோகன் ராம் அவர்களை நன்றியுடன் நினைவு கூர்கிறேன் .

என்றென்றும் அன்புடன் ,

சௌ பீ . தாமஸ் ,

9843688940 ,

6383669400 ,

thomasmarlan2604@gmail.com

02052019 .

உள்ளீடான கவிதைகள் :

01 . எழுதாத கவிதைகள் ,

02 . பேருந்து ,

03 . கழுதை ,

04 . என் மனைவியின் கவிதையில் நான் ,

05 . அன்பு என்பது வார்த்தையல்ல ,

06 . பேரக் குழந்தை ,

07. தாத்தாவின் தாலாட்டு ,

08 . தாய் ,

09 . நிர்வாணம் ,

10 . சாலையில் காலணி ,

11 . முகமூடி ,

12 . கரும்புச் சாறு ,

13 . வழிபாடு ,

14 . மாமாவின் மரணம் ,

15 . கிண்டர் ஜாய் ,

16 . சீக்கிரம் வந்து விடு ,

17 . நினைவு ,

18 . வீழ்வேனென ,

19 . மன்னிப்பு ,

20 . நானென்ன செய்ய ? ,

21 . என்னிருப்பு ,

22 . காற்றூதிய ஊதல் பை ( பலூன் ) ,

23 . நானொரு கவி ,

24 . புலம்பெயர்ந்த தமிழா ,

25 . பிச்சைக்காரர் ,

26 . கண்ணீரஞ்சலி .

நண்பர்களின்

கவிதை கலந்துரையாடலில்

லயித்த போது

நாமும் கவிதை எழுதலாமே

என நினைத்து

எழுதாத கவிதைகள் :

-----------------------------------

இலக்கியம் இலக்கணம்

இயல் இசை நாடகம்

எல்லாம் தெரிந்தும்

கவிதை

எழுத நேரமில்லை .

மொழி ஏனோ

அந்நியமாய்ப் போனது ?

என் கவிதைகள்

சில நேரம்

உன்

மௌனத்தை அசைக்கும் .

புல் நுனியில் அமர்ந்திருக்கும்

பனித்துளியில்

என் கவிதை ஒளிந்திருக்கும் .

நானெழுதிய கவிதைகள்

இன்னும்

உங்களால்

வாசிக்கப்படாமல் இருக்கிறது .

சிலுவை சுமந்த

பேனா

என்றாவதொரு நாள்

ஜீவனுள்ள

கவிதையை எழுதி விடும் .

அதுவரை

வேறொரு கவிதையில்

நீங்கள்

சற்று இளைப்பாறலாம் .

மூளையில் சுரக்கும்

எண்ணங்கள்

இதய விளிம்பில்

கிறுக்கிக் கிறுக்கி

கவிதை எழுதும் .

எனக்குள் எட்டிப் பார்த்த

கவிதைகள்

தலை குனிந்து

போனது பரிதாபம் .

பெரும்பாலும்

எனது கவிதைகள்

வார்த்தையின்றி

நிர்வாணமாய்த் திரிகிறது .

குறட்டை விட்டு

நிம்மதியாய்

கவிதைகள்

தூங்கிப் போனது

வார்த்தை மஞ்சத்தில் .

எழுதிக் குவித்த

கவிதைகளனைத்தும்

கைக்குள்

கசங்கிப் போனது .

சுற்றி நடக்கும்

அத்தனைக்கும்

கொதித்து

மகிழ்ந்து ஆனந்தித்து

கவிதை எழுத முற்படுகையில்

வார்த்தைகள்

போகும் போக்கில்

திசையறியாது

சுழித்துப் போகும் .

வழக்கொழிந்த

வார்த்தைகள் யாவும்

முன்னம் வந்து

கவிதை சொன்னால்

யாருக்குப் புரியும் ?

கண் இமை

மேல்

கவிதை குடியேறும் ,

கண் திறக்கையில்

சொற்கள் வெளியேறும் .

எல்லோரும் பாராட்டும்

எனது கவிதைகள்

இன்னும்

எழுதப்படாமலே இருக்கிறது .

கவிதையெழுத

அமர்ந்ததும்

வெள்ளைக் காகிதத்தில்

பேனா

அம்மி குத்திக் கொண்டிருக்கிறது .

சிந்தனை சிறகொடிந்தால்

கவிதை

பிறப்பது எப்படி ?

ஒரேயிடத்தில் நின்ற

எழுதுகோல்

காகிதத்தில் சிலையானது .

மை குடித்த பேனா

மனம் பேதலித்துப் போனது .

காகிதம்

வெறுமையாயிருப்பதால்

முறைத்துப் பார்க்கிறது .

என்

கவிதைகள்

மெல்ல மெல்ல

காகிதம் தின்கிறது .

எழுத நினைத்து

மறந்து போன கவிதைகள்

காலம் முழுக்க

புறம் கூறும் .

கவிதைக்குள்

கரைந்து

போய்

வார்த்தைகளற்று

மௌனமானேன் .

எழுத்து அசை

சீர் தளை

அடி தொடை

பிரித்து

அழகழகாய்

வார்த்தைகள் பின் தொடர

எழுத முனைகையில்

மறந்தே போகும்

அத்தனையும் .

கவிதையெழுதும் தருணம்

வார்த்தைகள்

தகராறு செய்யும் .

தூக்கம் துறந்த இரவுகள்

ஏக்கம் நிறைந்த வார்த்தைகள்

கண்ணீர் கலந்து

கவிதையின்றி ...........

பேனா திறக்காமல்

வார்த்தைகள்

கரை புரண்டோடும் ,

எழுத நினைக்கையில்

தடுமாறும் .

அர்த்த ஜாமங்களில்
வார்த்தை ஜாலங்கள்
விடிந்ததும்
முருங்கையேறும்
வேதாளம் .

எழுதிக் கிழித்த
காகிதக் கூளங்களில்
கோழிகள் கிளரும் .

மனதுக்குள் நெய்த
கவிதைகள்
ஊடு நூலில்லாமல்  ?

ஓடு சுமக்கும் நத்தை போல
வார்த்தை சுமந்து
கழுதையாகிறேன் .

தமிழகக் கலப்பையும்
எனது பேனாவும்
துருப்பிடித்து
ஒரு மூலையில் கிடக்கிறது .

கவிதைக்கும்
எனக்கும்
ஏழாம் பொருத்தம் .

தருமியாய்

வாழ்வது

நான் தான் என்னவோ !

இன்னும்

ஒரு கவிதை கூட

எழுதவில்லை

கவிஞர் என்ற அடைமொழியோடு ........

கையில் பேனா

இல்லாததால்

பரிதவித்துப் போனேன் ,

கவிதையும் தவிப்போடு .

அந்த தவிப்போடு

பேருந்தில்

செல்ல நேர்ந்த போது

பேருந்து

..................

பேருந்து

முன்னிருக்கையில்

அமர்வது

ரெம்ப பிடிக்கும் .

ஏறியதும்

இருக்கையில் அமர்ந்திருந்த

கிராமத்துக்காரர்

இன்னும்

சற்று தள்ளி

நான் அமர இடமளித்தார் .

நாமென்றால்

ஒன்றரை இருக்கையில்

அமர்ந்திருக்க

வருபவரோ

ஒரு பிட்டத்தில்

அமர்ந்தே பயணிப்பார் .

வருபவருக்கு இடமளித்தது

ஒரு சோறு பதம் .

பேருந்து புறப்பட்டதும்

சிறிது நேர

அரை தூக்கத்தில்

ஆழ்ந்து போனேன் .

விழித்ததும்

அவரிடம் பேச்சு கொடுத்தேன்

எங்கே

போகிறீர்களென்று ?

பள்ளி விடுதியிலிருக்கும்

மகளுக்கு சாப்பாடு

கொண்டு போகிறேனென்று

சொல்ல

நானோ

அவர் காலடியில்

ஓர் அடி உயர

பாத்திரத்தைப் பார்த்தேன் .

என்ன சாப்பாடு என

கேட்க

பாத்திரம் முழுக்க

பொரித்த ஆட்டுக் கறி .

ஏன் இவ்வளவென்றதற்கு

எல்லாப் பிள்ளைகளும்

சாப்பிடட்டுமே

என்றார் அவர்.

தன்னைப் போல் பிறரையும் நேசி

என்பது இது தானோ ?

செல்லமாய்

மெல்லமாய்

தென்றல் ஒன்று

தழுவிச் சென்றது .

நல்லார் ஒருவர் உளரேல்
அவர் பொருட்டு
எல்லோருக்கும் பெய்யும்
மழை .

தெரியாமல் எதிர்பாராமல்
எங்கெங்கோ
நல்லது விதைக்கப்படுகிறது .

நாம் ........ ?

அந்த மனிதரை
பெருமையாக நினைத்து
பேருந்து ஜன்னலில்
வேடிக்கை பார்த்த போது
ஒற்றைக் காலில் தவமிருந்த
மரங்களெல்லாம்
ஓடிக் கொண்டிருந்தன .

அங்கிருந்த
விளை நிலங்கள்
விலை நிலங்களாகி
அவ்வழியே
கழுதைகள் பொதி சுமந்த
காட்சிகள்
கண்ணில் நிழலாடியது .

கழுதை :

.............

நான் அழகாய் இல்லையெனில்

அது உன் தவறு .

உலகில் உள்ளவையெல்லாம்

அதனதன் இயல்பில்

அழகு தான் !

என்னளவு

குதிரையை விட

பலசாலி நான் .

எப்பொழுதும்

பயமறியாதவன் .

ஞாபக சக்தியும் அறிவாற்றலும்

அதிகம்

தானெனக்கு .

உன் அழுக்கைச் சுமக்கும்

பரிசுத்தன் நான் .

என்

பாலில்

மருத்துவக் குணமுண்டு.

இலக்கை நோக்கி

தடை உடைத்து முன்னேறும்

என்னைப் பார்த்து

கற்றுக் கொள்ள

ஆயிரம் உண்டுனக்கு .

மலைப் பாதைகளின்

கப்பல் நான் .

எதற்கெடுத்தாலும்

உனக்குத் தெரியுமா

என்று மட்டும்

கேட்காதே ,

உனக்கு எதுவும் தெரியாது

என்பது

எனக்குத் தெரியும் .

தெரியாது என்பது அறிவீனமல்ல .

நிறைகளோடு

தனித்திருப்பதை விட

குறைகளோடு

இணைந்திருப்பது நலம் .

அஃறிணைகள்

என்னை வெறுப்பதில்லை .

நீயென்னை வெறுத்தாலும்

என்னிருத்தல்

எனக்குப் பிடித்திருக்கிறது .

முட்டாள்களோடு

ஒப்பிடாதே,

உன்னை விட

அறிவாளி நான் .

மூளை மழுங்கிப் போனவனே

என்னைப் பார் யோகம் வரும்

என்றால்

என்னை வளர்ப்பவர்கள்

வறுமையின்

விளிம்பு நிலையில்

என்பதை ஏன் மறந்தாய் ?

ஹெபைஸ்டோஸுக்கும்

இந்திரனுக்கும் அக்னிக்கும்

சீதளா தேவிக்கும்

நான் வாகனம் தான் .

கிளியோபாட்ராவின் அழகுக்கு

நான் காரணமென்பது

உங்களில்

எத்தனை பேருக்குத் தெரியும் ?

ஏளனமும் அவமானமும்

முக்காலமும்

எனக்குத் தான் .

உடைந்து போன

இதயத்தில்

ஏளனங்களைக்

கேட்டு

பழகிப் போன எனக்கு

ஓசன்னா

என்ற ஒற்றைச் சொல்

என் காதுகளில்

இன்னும் இன்னும்

ஒலித்துக் கொண்டேயிருக்கிறது .

உலகமே வெறுத்தாலும்

அதுவொன்றே போதும்

இயேசு

என் மேல் பயணித்தாரென்று !

கற்றாரைக் கற்றாரே

காமுறுவர் .

இகழ்ந்தாலும்

மேன்கழுதைகள் மேன்கழுதைகளே !

கழுதையை

நினைத்த நேரத்தில்

என் மனைவி கவிதை

ஞாபகம் வந்தது .

என் மனைவியின் கவிதையில் நான் :

................................................................

நான் வளர்த்த

நாய்க்குட்டி

வாலாட்டி

ஆசையாய் முகம் நக்கும் ,

நீயோ

எந்த வகை நாய்க்குட்டி ?

பல் கடித் தடங்களும்

நகக் கீறல்களும்

மிருகத்தின் வெளிப்பாடல்ல ;

அன்பின் உச்சங்கள் ,

அதுவே எச்சங்கள்.

எப்பொழுது படுத்தாலும்

அணைத்துக் கொள்கிறாய் .

சட்டெனப் பிரிந்தாலும்

பட்டென ஒட்டிக் கொள்கிறாய் .

அனிச்சைச் செயலோ ?

அதனால்
மகிழ்ந்தேன் ,
ஆதலால்
மன்னித்தேன் .

களைத்துத் திளைத்த
பாதிக் கண்கள்
மூடிய தருணங்கள் ,
முன்னம் செய்த யாகங்கள் .

உன்னிடம் என்னயிருக்கிறது ?
ஒன்றுமேயில்லை .

ஆனால்
ஏதோயிருக்கிறது !
அது
பாடாய்ப்படுத்துகிறது .

மௌனமாயிருக்கும் போதெல்லாம்
நினைவின் சாரலில்
உள்ளம்
குளிர்கிறது ,
உடல்
நனைகிறது .

ஆடையணியும் நேரம்

உள்ளே நுழைந்து

ரசிக்கிறாய் , சிரிக்கிறாய்

போனால் போகிறது ,

பிழைத்துப் போ .

அன்பான தோழனே

அள்ளியள்ளிப் பருகு ,

அத்தனையும் உனக்கு தான் .

திக்கு முக்காடிப் போ !

உனக்காகக் காத்திருக்கும்

எச்சில்

முத்தங்கள் .

நீ

சென்ற பிறகு

பார்வைகள்

உன் காலடி தேடும் .

உலர்ந்த என் ஆடைகளை

மடித்துக் கொண்டிருந்தாய் ;

மௌனமாயிருந்தேன் நான் ,

திட்டினாலும்

பரவாயில்லையென .

அவிழ்க்கத் தெரிந்தவனுக்கு

மடித்து வைக்கவும்

தெரிந்திருக்க வேண்டும் ,

என் சிரிப்பில்

கண் சிவந்தாய்.

விரல்களால்

தலை முடி

களைந்த போது

அணைத்துக் கொண்டாய் .

வெப்பப் பெரு மூச்சில்

உடலெங்கும் ரத்தத் திட்டுக்கள்.

இது தான்

கடவுளின் ஆசீர்வாதம்.

நானொன்றும்

லிலித் அல்ல ,

உன்

எலும்பில் எழுந்தவள்

நான் ஏவாள்.

இது யாருக்குத் தெரியும் ?

உனக்குத் தெரியும் .

அதனால் தானென்னவோ

தலை மீது

தாங்கிக் கொள்கிறாய் ,

பித்தா

அருளாளா

என்

தோடுடைய செவியன் நீ.

என் பாராட்டெல்லாம்

அன்பாய் அழகாய்

தோழமையோடு

வளர்த்த

உன் அன்னைக்குத் தான் .

உனக்கல்ல !

அம்மாவை

எவனெல்லாம் நேசிக்கிறானோ

அவன் மட்டுமே

மனைவியை

உண்மையாய் நேசிப்பான்.

நீ

நிம்மதியாய்

எனக்கு முன்னால்

மரித்துப் போ.

உன் பெருமைகளை

ஊரெங்கும் விதைத்து விட்டு

சந்தோசமாய்

பின்னால் நான் ,

பின்னல்

சடையோடு .

இன்னொரு ஜென்மம்

வேண்டாம் ,

இருந்தால்

உனக்காகக் காத்திருக்கும்

இந்த மல்லிகைச் செடி .

மனைவியின் ஞாபகமாய்

வீட்டில் நுழைகையில்

அவசர அவசரமாய்

மகளின் பிள்ளைப் பேறுக்காக

மருத்துவமனை செல்லும் வழியில்

அன்பு என்பது வார்த்தையல்ல :

........................................................

வீட்டை விட்டு

சிறிது தொலைவில்

எங்கள் முன்னால் மிதிவண்டியில்

ஒரு சிறுவன்

சென்று கொண்டிருந்தான் .

வீதியோரம் கொட்டிக் கிடந்த
மணல் மேட்டில்
படுத்திருந்த
நாயைப் பார்த்து
மணியடித்தான் .

திடுக்கிட்ட நாய் ,
பின் சுதாரித்து
அவனைப் பார்த்தது .

சிரித்துக் கொண்டே
அவன் டாட்டா காட்டியதும்
நாய்
வலது புறம்
வாலாட்டியது .

கண்ணோடு கண் நோக்கின்
உடல் சிலிர்த்து
சுரக்கும்
பெயர் தெரியா சுரப்பி ,
அதுவே
அன்பின்
மையப் புள்ளி .

சகலத்திற்கும்
அன்பே ஆணி வேர் .

இங்கு

எல்லா ஜீவனும்

ஒன்று தான் ,

வேஷம்

தான்

வேறு வேறு .

அன்பு மட்டுமே

தனது விசுவாசம் காட்டும் .

எது விதைக்கப்படுகிறதோ

அதுவே அறுக்கப்படும் .

சிறு வயதில்

எவனொருவன்

செல்லப் பிராணிகளை

நேசிக்கிறானோ

அவன்

பெற்றோரைக்

கை விட மாட்டான் .

அன்பு என்பது

வாழ்வின்

ஆதார ஸ்ருதி .

அன்பிற்கும் உண்டோ

அடைக்குந்தாழ் ?

அன்பு

அன்பைத் தான்

பிரசவிக்கும் .

அன்பு ஒருக்காலும் ஒழியாது .

அன்பைத் தவிர

பரிசுத்தம்

வேறு எதுவுமில்லை .

அன்பு

பாரபட்சமற்றது .

உயிரின்

இயக்கம் எதுவாகவோ

இருக்கட்டும் ,

அன்பே அச்சாணி .

அன்பு

என்பது

வார்த்தையல்ல ,

அது

ஆன்மாவின் ஊற்று .

நெகிழ்ந்து போய்

மருத்துவமனை அடைந்து

புதிய வரவை

எதிர்பார்த்து

பேத்தியைக் கண்டதும்

அளவில்லா மகிழ்ச்சியோடு

ஒரு சின்னக் கவிதை .

பேரக் குழந்தை :

...........................

உன்

பெயரை

உச்சரிக்கையில்

என்னைச் சுற்றி

மொய்க்கின்றன

ஏராளமான எறும்புகள்

அப்பப்பா .......

நீ

பிறந்த

இந்த இரவில்

தூங்கா விழிகளில்

புதியதொரு அத்தியாயம்.

உயிர் மூச்சின்

அடித்தளம் நீ .

உன்

கண்ணசைவில்

கண்ணிமைக்கா

நொடிப் பொழுதில்

கரைந்தே

போகிறோம் .

எங்கள்

இதயச் சுவர்களில்

உன் அழகெனும் ஓவியம் .

உன்

சின்னஞ்சிறு

விரல் பற்றும்

எங்கள்

விரல்களில்

ஸ்பரிசம் சொல்லும்

ஆயிரம் கதைகள்.

சிறு குழந்தைகளைப்

பார்க்கும்

கணங்களில்

உன் முகம்

மட்டும்

அலை மோதும்.

உன்னொலி

மட்டும்

அர்த்தம் புரியா

புது மொழி ,

நாங்களாகவே

பொருளுணர்ந்து

கொள்கிறோம்.

நீ

சிந்தும்

புன்னகையில்

மறந்து போகும்

அத்தனை துயரும் !

உன்

பார்வையில்

தொடுதலில்

சிரிப்பினில்

மொழியினில்

இனம் புரியா நெஞ்சில்

பாலூறும் அதிசயம் .

பேரக் குழந்தைகளை

நேசிக்கும் எல்லா உள்ளங்களும்

மறுபடியும் பிறக்கும் ,

ஆனந்தத்தில் மிதக்கும் .

குழந்தையின் அழுகுரல்

கேட்டு

பல ஆண்டுகளானதால்

இனிமையாக

இருந்தது .

தாத்தாவின் தாலாட்டு :

......................................

கண்ணே கண்மணியே

பொன்னே பொன்மணியே

அழகின் திருவுருவே

அன்பின் அடைக்கலமே

ஆரிராராரோ ஆரிராராரோ .

காலைப் பனிமலரே

கவிதைப் பூமகளே

எங்கள் புது உறவே

என் மடி தூங்கிடுவாய்

ஆரிராராரோ ஆரிராராரோ .

பிஞ்சுக் கால் பதித்து

நெஞ்சில் நீ தூங்கு

கொஞ்சி விளையாடு

மஞ்சள் முகத்தோடு

ஆரிராராரோ ஆரிராராரோ .

நிலவும் வானும் போல்

நீயும் நானும் போல்

அத்தி பூத்தாற் போல்

அழகியே அழுதிடுவாய்

ஆரிராராரோ ஆரிராராரோ .

சான்றோர் புகழ் பாட

என்றும் வாழ்ந்திடுவாய்

ஆலும் வேலும் போல்

அருகித் தழைத்திடுவாய்

ஆரிராராரோ ஆரிராராரோ .

தாழைப்  பூச்சூடி

புன்னை நிழல் தேடி

நெய்தல் நிலமகளே

தெய்வம் துணையுண்டு

ஆரிராராரோ ஆரிராராரோ.

பேத்தியின் மகளைக் கண்டு

மகிழ்ந்திருந்த

என் தாயைப் பற்றி

நினைத்த வேளையில்

கட்டிப் போட்டாலும்

சுட்டித்தனமாய்

எட்டிப் பார்க்கும்

குட்டிக் கவிதை  .

தாய் :

........

வழி

கொடுத்தாய் ,

வலி

எடுத்தாய் ,

வளி

கொடுத்தாய் .

சட்டென்று

வந்த

கவிதை நயத்தில்

எனக்கு நானே

சட்டைக் காலரை

தூக்கி விட்டுக் கொண்டேன் .

இது

அதிகப் பிரசங்கித்தனமாகத்

தெரியவில்லை !

தேதிக் காகிதங்கள்

கிழிந்து கிழிந்து

கழிந்து வந்தது ,

காலங்கள்

லஜ்ஜையின்றி

வேகமாய் நகர்கிறது .

அன்றொரு நாள்

புலனம்

காணொளிக் காட்சியில்

மனம்

பதை பதைத்தது ,

நெஞ்சில்

உதை உதைத்தது .

வட இந்திய இளைஞர்களால்

நிர்வாணமாய்

அம்மணமாய்

சாலையில்

இழுத்து வரப்பட்ட

கிறிஸ்தவ தலித் பெண்ணுக்கு

நடந்த கொடுமையைப் பார்த்து

வேதனையோடு

ஒரு பதிவு .

நிர்வாணம் :

....................

கல்லெறிபட்ட

விபச்சாரிக்குக் கூட

இந்த நிலை

வரவில்லை !

இயேசுவே ,

கல்வாரியில் உன்னை

ஆடையோடு தானே

அழைத்துச் சென்றார்கள் !

என்னைப் பின்பற்ற விரும்பும்

எவரும்

தன்னலம் துறந்து

ஆடையைத் துறந்தும்

என்று சொன்னாயோ ?

இல்லையே ,

பின்

எனக்கு மட்டும்

ஏனப்பா ?

ஏவாள் என்பவள்

குறிகள்

மாறிய

ஆதாம் அல்லவா !

என்

நிர்வாணமும்

உன்

நிர்வாணமும்

ஒன்று தானே ?

உனக்கிது

முலையென்று

யார் சொன்னது ?

ரத்தம்

பாலாய் மாற்றும்

உடலும் உயிரும்

வளர்க்கும்

மாமிச மேடல்லவா ?

இதை யோனியென்று

யார் சொன்னது ?

பூமிக்கு

நீ

வந்த வழியல்லவா !

மொழியின்றி வழியெங்கும்

விழி வற்றி

என்ன கொடுமையிது ,

என் மகனே ?

உன்

தாய்க்கும்

சகோதரிக்கும்

மனைவிக்கும்

மகளுக்கும்

இவைகளும் உண்டல்லவா ?

நீ

துணிவாயா

துணி களைய ?

என்

முதுகில் மிதித்தவன்

எங்கே அவன் ?

ஆடையணிந்திருந்தால்

காலடித் தடம் கண்டு

மிதியடி

செய்து தந்திருப்பேனே ,

வாய்ப்பிழந்தாயே என் மகனே !

வாய் பிளந்தேனே

மிதி தாளாமல் .

வீதியெங்கும்

என்

நிர்வாணம் .

ஊர் கூடி

தேர் இழுத்தது

இல்லை

அம்மணமாக்கி

தேகம் இழுத்தது .

சொன்னார்கள்

வலியும் வேதனையும்

கொடுமையென்று ,

அவிழ்த்த போது தெரிந்தது

வலியை விட

வேதனை

கொடுமையென்று .

ஞானியின் நிர்வாணம்

ஆன்மீகத் தவிப்பு ,

உன்னால் என்

நிர்வாணம்

ஆணவக் களிப்பு .

கலங்கிய மௌனத்தில்

களங்கிய கண்கள்

அம்மணமாய் . . .

ஆறாத வேதனைகளில்

மரித்துப் போனேன் .

என்னைச் சுற்றி

ஆயிரம் மாக்கள்

இல்லை மக்கள் ,

ஊமையாய் செவிடாய்

முடமாய் மூடராய்  . . . ?

என் தகப்பனே

என் சகோதரனே

என் மகனே

இச்செயல்

தகுமா உனக்கு ?

இப்படித் தானே

த்ரெளபதி

கதறி இருப்பாள் .

அன்று சபையில்

இன்று சாலையில் .

உலகில் எவளெல்லாம்

துயருகிறாளோ

அவளெல்லாம் த்ரெளபதி தான் .

த்ரெளபதியின்

வாழ்வே

பலி பொருள் ,

தலித் பெண்ணின்

நிர்வாணமே

பழி பொருள் .

தகழியாய் நெஞ்சிருக்கையில்

அகழி எதற்கு ?

எனக்கு நானே
உவமையானேன் .

கையறு நிலையில்
நான் .

பெண்ணென்றால்
பேயும் இரங்கும் ,
நீ ?

ஜாதி மதம்
இனம் மொழி
நிறம் குணம்
பண்பாடு நாகரிகம்
எதுவும் வேண்டாம் ,
பெண்ணென்றும்
நினைக்கவில்லையே !

மகாபாரதம்
தினந்தோறும் அரங்கேற்றம் .

அங்கு
அரை நிர்வாணமாய்
இங்கு
முழு நிர்வாணமாய் .

சபைக்கு

வந்த

கண்ணன்

சாலைக்கு வரவில்லை ?

எந்தக் கண்ணனும் வரவில்லை !

எந்தக் காவலனும் வரவில்லை ?

இது தான்

சாக்த வழிபாடோ ?

எனக்காக

நீங்கள் அழாதீர்கள் ,

உங்களுக்காகவும்

உங்கள் பிள்ளைகளுக்காகவும்

அழுங்கள் .

மதம் பிடித்து

மதம் வளர்ப்பாயா ?

மதமல்ல

மனம் மாறு ,

மனிதனாய் மாறு .

வேதாகமம் படித்தது  தவறா ?

தேவாலயம் சென்றது தவறா ?

என் மகனே

உண்மை கசக்கும்

தெரியாதா

உனக்கு !

இயேசு

நல்லவரென்று

ருசித்துத் தான் பாரேன் !

யாரும்

கட்டாயப்படுத்தவில்லையே !

தாங்கள் செய்கிறது

இன்னதென்று

இவர்களுக்குத் தெரியும் .

தந்தையே

இவர்களை மன்னியும் .

ஒரு காலம் வரும் ,

அப்போது

பிள்ளை பெறாதோர்

பேறுபெற்றோர் .

உறுதியாகச் சொல்கிறேன் ,

ஒரு நாள்

நீங்கள் அழுவீர்கள் ,

புலம்புவீர்கள் .

அப்போதும்

நான்

உங்களை மன்னிப்பேன் .

நானும் தாயல்லவா !

ஏனென்றால்

நான் இன்னும்

உங்களை நேசிக்கிறேன் .

எவ்வித

நிபந்தனையின்றி . . . . .

பல்வேறு கேள்விகளுக்கு

மத்தியில்

நிர்வாணம்

எது

என்பதில்

என் பதில்

ஒளிந்திருக்கிறது !

செய்தது

சரியெனில்

உங்கள் ஆன்மா

இளைப்பாறட்டும் .

இளைப்பாறும்

ஆன்மா

களைப்படையும் போது

இயற்கை

சீற்றமடையும் .

இயற்கை

ஐம்பூதங்களானது ,

அத்தனைக்கும்

விழிப்புண்டு .

இங்கு

மனிதர்கள் தான்

வாழ்கிறார்களா ?

மதம்

பார்த்தாயே

மனம்

பார்த்தாயா ?

விழியில் வழியும்

நீரும்

உருகி ஓடும்

கன்னம் சூடாகும் .

சூடான கண்ணீர் துடைத்து

மனிதாபிமானம்

செத்து விட்டதா

என வேதனையோடு

நொந்து போய்

சற்று

இளைப்பாறி வரலாம்

என்று

வாகனத்தில்

சென்று கொண்டிருந்த

தருணம்

சாலையில்

சின்னதாய்

ஒற்றைக் காலணி கிடந்தது .

மனம்

உடனே

ஒரு கவிதை

சொல்லு சொல்லு

சொல்லுயென அடம் பிடித்தது .

அடம் பிடித்த கவிதை

தடம் பதிக்கும்

என்பதில்

ஐயமில்லை .

சாலையில் காலணி :

..................................

சாலையில்

தன்னந்தனியாய்

கிடக்கும்

சின்னஞ்சிறு

செருப்பின் மீது

வாகனத்தை ஏற்ற

மனம் ஏனோ வரவில்லை .

மனம்

சின்னச் சின்ன

விசயங்களில்

அதீத கற்பனைக்குச்

சென்று விடும் .

சாலையோர

வியாபாரியொருவர்

முகமூடிகளை

விற்றுக் கொண்டிருந்தார் .

அந்நேரமும்

ஓர் இத்நூண்டுக் கவிதை .

முகமூடி :

.............

சிரித்துக் கொண்டே

அழுகிறேன்

முகமூடி தரித்த

யாருமறியா பொழுதுகளில் .

பொழுது சாயும் நேரம்

நெடு நாட்கள் பிறகு

சாலையில்

சந்தித்த நண்பனோடு

முன்னோக்கிய

காலங்களில்

மூழ்கித் திளைத்தோம் .

திளைத்திருந்த வேளையில்

அருகிலிருந்து

கரும்புச் சாறு

இரு குவளைகள்

வாங்கி வந்தான்

நண்பன் .

கரும்புச் சாறு :

.......................

செம்பட்டை தலையுடனும்

அழுக்கான

கிழிந்த ஆடையுடனும்

இரு சிறுமிகளும்

ஒரு சிறுவனும்

எங்களைக் கடந்து சென்றனர் .

கரும்புச் சாறு வண்டியைப்

பார்த்தவுடன்

அவன்

இவளை இழுக்க

இவள்

அவளை இழுக்க . . .

அங்கே மல்லாடியது

தரித்திரம் ,

சரித்திரம் ஆகுமென்று

தெரியாமல் .

மூவரும்

வண்டியின் அருகே வந்தனர் .

அனைவரும்

அவர்களைப் பார்த்தோம் .

பெரியவள்

இரண்டு இரண்டு ரூபாய்

நாணயங்களை

மேஜையின் மீது வைத்தாள் .

அவள்

ஏதும் சொல்லவில்லை .

எங்கள் பார்வையெல்லாம்

அங்கு நிலவிய

சூழல் மீது .

கரும்புச் சாறு வியாபாரி

மௌனமாய்

மூன்று குவளைகளில்

முக்கால் அளவு

கரும்புச் சாறு

ஊற்றிக் கொடுத்தார் .

அருந்திய பின்

மூவரின் முகமெல்லாம்

பிரகாசமாயிற்று .

மூவரும் தலையசைக்க

நால்வரும்

சிரித்தனர் .

அவர்கள் முன்னகர்ந்த போது

செலவு தானே

என நான் சொல்ல ,

ரூபாய்

முக்கியமல்ல

இது வரவு என்றார் .

கிழக்கிலிருந்து மேற்காக

மின்னல் ஒன்று

பளீரென

வெட்டிச் சென்றது .

நா நயத்தில்

நாணயம் தோற்றுப் போனது

முதன் முதலாய்

முழுவதுமாய் .

அவரின்

நாணயத்தில்

இந்திய நாணயம்

மதிப்பிழந்தது .

மேஜையை சுத்தப்படுத்த

தண்ணீர் ஊற்றிய போது

நாணயங்கள்

அங்கேயே இருந்தது .

அங்கேயே இருந்த

நாணயம்

மின்னியது

அவர்

மனசு போல .

கரும்பைப் பார்க்கும்

சமயங்களில்

அவர் முகம் வந்து போகுமல்லவா !

வாழ்வில்

அன்று மட்டும் தான்

கரும்புச் சாறு இனித்தது .

வேறு எந்த நாளுமல்ல .

கரும்புச் சாறு தந்த

தித்திப்பில்

உதடுகள்

வார்த்தை வராமல்

ஒட்டிக் கொண்டது .

ஒட்டிய உதடுகளை

மெதுவாய் பிரித்து

கோவிலுக்குப் போகலாமா

என நண்பன் கேட்டான் .

கேட்டதும்

கோவில் சென்றோம்.

மக்களின் தேவைகளை

அரசாங்கம்

பூர்த்தி செய்யாததால்

கோவிலுக்குள் அதிக கூட்டம் .... !

கூட்டமுள்ள

கோவிலுக்குள் அனுமதிக்க

ஏகப்பட்ட கெடுபிடிகள் .

முதலில்

உள்ளே அனுமதி ,

வணங்குவதா

இல்லையா

என

மனம் தீர்மானிக்கட்டும் .

பொருள் முதல்வாதியா

கருத்து முதல்வாதியா

தராசுத் தட்டு

எடை போடட்டும் .

வழிபாடு :

.............

காலங்காலமாய்

மனிதனின்

ஆச்சரியக்குறி .

இருக்கிறதா இல்லையா

பதிலேதுமின்றி

முடிந்து போகிறது

வாழ்வு .

தெரிந்த கேள்வி

தெரியாத பதில் ,

அறிந்த பதில்

அறிவற்ற கேள்வி .

நம்பு அல்லது நம்பாமல்

போ .

ஆனால் உறுதியாயிரு ,

உண்மையில்

ஊசலாட்டம் இருக்காது .

ஏதோ

ஒன்றில்

நம்பிக்கையாயிரு .

கடவுள்

என்னை

முழுமையாகப்

புரிந்து கொண்டதால்

என்னோடு

அன்பாய் இருக்கிறார் .

புரிதல்

அன்பைப் புனிதமாக்கும் .

இறைவன்

என் மீது வைத்துள்ள

அன்பைக் கண்டு

வியந்து போனேன் .

என்னெதிரே

கடவுள் இருக்கிறார் .

கடவுளின் காது

பெரியதாக இருந்தது ,

என்னிடம்

சொல்வதற்கு

நிறைய இருந்தது .

இன்றைய

சிந்தனை

சொல்

செயல்

அனைத்தும் அவரிடம்

சொல்லிக் கொண்டிருந்தேன் .

அவரும் அமைதியாய்

கேட்டுக் கொண்டிருந்தார் ,

அவர் செவிகள்

ஒன்றும்

மந்தமாகி விடவில்லை .

இதைத் தா

அதைத் தா

எனக் கேட்காமல்

அவரையே

பார்த்துக் கொண்டிருந்தேன் .

அவரும்

என்னையே

பார்த்துக் கொண்டிருந்தார் .

போய் வருகிறேன்

என்றதும்

சிரித்தார் .

பிரார்த்தனை முடிந்தது .

உரையாடல் தானே

பிரார்த்தனை .

நஞ்சான

நெஞ்சு

பஞ்சானது .

எங்கிருந்தோ

ஒரு பறவையின் தூவல்

மெல்ல மெல்ல மேலே

அசைவாடிக் கொண்டிருக்கிறது .

கடவுள் என்பது

உருவமல்ல

உணர்வு .

கோவில் விட்டு நகர்ந்து

தத்தம்

வீட்டுக்கு தயாரானோம் .

மனக் குதிரை

ஓடி ஓடி

களைத்து

வீடு திரும்பியது .

திரும்பிய குதிரை

தூங்கிப் போனது .

எனக்கும் தூக்கம் வந்தது .

தூக்கத்தில் செல்பேசி

திக்கிதிக்கி

மணி ஒலித்து

ஒரு

துயரச் செய்தி சொல்லியது ,

என் தாய் மாமா

இறந்து விட்டார் .

அவரைப் பார்க்கும் பொழுது

இந்த உலகத்தின்

தொடர்பறுத்து

நிம்மதியாய்

எழும்ப முடியாத

ஆழ்ந்த தூக்கம் , துக்கம் .

மாமாவின் மரணம் :

.................................

உயிரோடு இருக்கும் வரை

ஒருவரின் மதிப்பு

தெரிவதில்லை .

அவரை

மன்னிக்கத் தெரியவில்லை ,

கொண்டாடத் தெரிவதில்லை .

இறந்த பிறகு

பாசம் பொங்குவதால்

யாருக்கு லாபம் ?

இந்த நேரம்

ஒரு சின்ன கேள்வி

நமக்கு

வாழத் தெரியவில்லையோ ?

உண்மை தான் .

ஒருவர்

நமக்குச் செய்த தீயவைகள்

கண் முன் நர்த்தனமாடும் போது

அவரை

வெறுக்கத் தொடங்குகிறோம் .

அதே வேளையில்

அவர் செய்த நல்லவைகளை

மனம்

மறுதலிக்கிறது .

தீதை மறந்து நல்லவை
துளிர்க்கும் போது
நாம் அழகாய் இருப்போம் .

அழகாய் இருப்பதை விட
அன்பாய் இருப்போம் .

நாம்
நூறு விழுக்காடு
பரிசுத்தம் அற்றவர்கள் தான் ,
பிறகெப்படி தீர்ப்பிடுவது ?

அதே அளவு தான் நமக்கும் !

வறட்டு கௌரவங்களும்
குருட்டு எண்ணங்களும்
நிறைந்து
நாம்
வாழ்ந்து
எதை சாதிக்கப் போகிறோம் ?

எதை சாதித்து விட்டோம் ?

உறவுகளை நேசிக்கத் தெரியாமல்
பிறரை எப்படி
உள்ளன்போடு நேசிப்பது ?

அதில் உண்மையும் இருக்காது .

உறவுகள்

அழுவதை விட

உலகம்

அழுதிட வேண்டும் .

அது தான்

வாழ்க்கை .

நல்ல எண்ணங்களை

வீட்டிலிருந்தே தொடங்குவோம் .

கண் கெட்ட பிறகாவது

ஞானம் வந்ததே .

பல்வேறு

வேளைகளிலும்

வேலைகளிலும்

கவிதையெழுத மறந்து போனது .

ஒரு நாள் கடையில்

நின்று கொண்டிருந்த போது

ஒரு தாத்தா

கிண்டர் ஜாய் விலை கேட்டார் .

கிண்டர் ஜாய் :

----------------------

தொள தொள

சட்டைக்குள்

மெலிந்த நலிந்த தாத்தா .

என்னிடம்

கிண்டர் ஜாய்

விலை கேட்டார் .

கேட்டதும்

மலைத்துப் போனார் .

கடை விட்டு நகர்ந்து

குடும்பத்துடன்

சேர்ந்தார் .

அங்கு

ஒரு பாட்டி ,

ஒரு பேத்தி .

என்ன சொன்னாரோ தெரியாது !

சிறுமியின் கண்களில்

நீரின் அபிநயம் .

எடுத்துக் கொடுத்தேன்

கடைக்காரர்

அனுமதியோடு

ஒரு

கிண்டர் ஜாய் .

சிறுமி

மறுத்தாள் .

தாத்தா

சரியென்றதும்

வாங்கிக் கொண்டாள் .

சிறுமியின் விழிகள்

விரிந்தது .

விரிவடையும் அனைத்தும்

வெப்பத்தால்

என்பதல்ல ,

சந்தோசத்திலும் விரிவடையும் .

சிறுமி

எனைப் பார்த்து

சிரித்தாள் .

வார்த்தைகள்

ஒலியற்றுப் போயின .

அன்பு

பண்டமாற்று பொருளாயிற்று .

நன்றி சொன்னாள்

பாட்டி .

அரசாங்கம்

அச்சடிச்ச காகிதம்

என்றேன் .

சடசடவென

மழை பொழிந்தது .

தட்பம் கூடியதால்

வெப்பம் குறைந்தது .

சில

நேரங்களில்

அப்படித் தான் .

நல்ல விசயங்கள்

மரத்திலிருந்து

பூ உதிர்வது போல

எதார்த்தமாய்

நடந்து கொண்டிருக்கும் ,

இதற்கெல்லாம்

கர்வம் கொள்வதில்

பொருளேதுமல்ல.

வீடு வந்து சேர்ந்ததும்

மனைவியின்றி தனிமை .

தாய் வீடு சென்றிருந்த

மனைவியின்

பிரிவு கண்டு

கண்ணீரில்

காகிதக் கப்பல் தூது .

சீக்கிரம் வந்து விடு :

..................................

உயிருக்குள் உறங்கியிருக்கும்

நினைவுகள்

மெதுவாய் மூச்சு விடும்

ஆமை போல .

எழுதிய கவிதையை விட

எழுதாத

வெற்றுத் தாள்

அழகானது .

பல்லிடுக்கில் சிக்கிய

துணுக்கு போல்

நினைவுகள்  உறுத்தும் .

இரவில் விழித்து

இருட்டைக் கிழித்து

புலர் பொழுதில்

புல்லில்

நுரை பனி.

கனவுக்குள்

எப்பொழுதும் ,

நினைவில் தொலைந்தது

முப்பொழுதும்.

நீரலை கோலம்

மௌனக் குளத்தில்

நீளமாய்

நீலமாய்

வட்டமிடும் .

நுரை கக்கும் அலையின்

கூச்சலில்

ஆழ் கடல்

அமைதியாயிருக்கும் .

பிரிவு

சுகம் தரும் !

நாக்கு கடித்து

குருதி

சுவைக்கும்

நாய் போல

கல்லறை வரை

கனவு சுமக்கும் .

கண்ணீர்க் குளத்தில்

காகிதக் கப்பல்

கவிழ்ந்தே போகும் .

மரக்கிளையில்

வாலாட்டும்

சின்னக் குருவி

பெட்டை தேடி

கீச்சுக் குரலில் பாட்டெழுதும் .

வெட்கம் விட்டுச் சொல்கிறேன்

உன் சேலை போர்த்தி

தூங்குகிறேன் ,

உன் வாசத்தில்

இமை மூடி

இடையூறு செய்கிறது .

இனம் புரியா கவலையொன்றில்

அசை போட்டு

அசை போட்டு

நெஞ்சு படபடக்கும் .

வரைந்த கோலம்

அழியாமல் இருக்கிறது

வாசலில்

நீர் தெளிக்காமல்

நீ தெளிக்காமல் .

விரைந்து

வா

வீடு வரைக்கும் .

எங்காவது கோவிலுக்குப் போ

அங்குள்ள

மணிகளெல்லாம்

என் புலம்பொலி சொல்லும்.

சந்தனக் காட்டிற்குள்

கிறுகிறுக்கும் காற்றுக்கும்

தலை வலிக்கும் ,

மண்டை ஓட்டிற்குள்

மல்லிகை வாசம்

தீப்பிடிக்கும் .

கண்ணிமைக்கும்

நொடிப் பொழுதில்

தொலை தூரம்

நகர்ந்து விடும் .

பூக்களின் கண்ணீரும்

மணக்குமடி .

கடல்

கொப்பளிக்கும்

தண்ணீர் மட்டும்

இனிக்கவா

செய்யும் ?

தனிமை

என்னை தீயில் வாட்டி

ரசித்து

ருசித்துப் பார்க்கிறது .

என் ஓர்மை

உண்டெங்கில்

ஓடி வா பார்க்கலாம் !

நரை துளிர்த்து

முதுமை வரும் ,

அதுவரைக்கும் ?

சீக்கிரம் வந்து விடு

எதைக் கொண்டு

தூதனுப்ப ?

இறக்கி வைக்க முடியாத

கர்ப்பத்தோடு

கொல்லும் நினைவுகள் .

செம்புலப் பெயல்

நீர் போல .

தாய் வீடு சென்றவள்

ஓரிரு நாளில்

திரும்பக் கூடும் .

பின்

கூடும் கூடும்

கூடும் .

அதுவரை அவள் நினைவுகளோடு .

நினைவு :

............

வானில்

ஒளிரும் நிலவு கூட

எந்தன்

விரகம் தூண்டும் .

வருத்தம் இல்லை

இருந்தும் ஏனோ

நினைவு

தொலைந்து போகும் .

தோளில்

சாய்ந்த ஞாபகமெல்லாம்

கொன்று

கொன்று

உயிரைத் தின்னும் .

சிறுகோட்டுப் பெரும் பழமாய்

வேறென்ன

நான் சொல்ல !

இதமான

இளஞ் சூட்டில்

இனிய நினைவுகள்

அடை காக்கப்படுகிறது .

மனைவியின்

நினைவுகளோடு

பொழுது விடியும் .

விடிந்த பொழுது

இரவில் மடியும் .

மடியும் இரவின் மடியில்

காமம் புலம்பும் .

புலம்பிப் புலம்பி

சோம்பல் முறித்த

காலைப் பொழுதில்

பூபாளம்

இசைக்கும் .

பொழுது

புலர்ந்து

அன்றாடம்

பல முகங்களில்

வர்க்கப் போராட்டம் .

வீழ்வேன் என்று

நினைத்தவர்களைப் பற்றி

அநேக நாட்கள்

வேதனை

கொண்டிருக்கிறேன் .

அதன்

பிம்பமே இக்கவிதை .

வீழ்வேனென :

........................

செஞ்சோற்றுக் கடன் தீர்க்க

மனிதனாய்

நான் மட்டும்

தனியனாய் ,

ஏற்றுக் கொள்ள

உன்னிடம் பாத்திரமில்லை .

தஞ்சமென

ஓடி

வந்தேன்

மாட்டிக் கொண்டானென

அக்களித்தாய் .

தலை சாய மடி கேட்டேன்

தலையணை

தந்தாய்

சில முட்களோடு .

கிடைத்ததே போதுமென்று

ஏற்றுக் கொண்டேன் .

திரும்பும் போதெல்லாம்

தலை குத்தும் .

தாங்கிக் கொண்டேன் .

இதுவொன்றும்

முள் முடியில்லையே !

கொடிது கொடிது

நல்லவனாய்

வாழ்வது கொடிது .

அவ்வை சொன்னாள்

அரிது அரிது

மானிடராய்

பிறத்தல் அரிது .

பருவ மாற்றமில்லாமல்
உருவ மாற்றமடைந்த
உனக்கு வாழ்வு பற்றி
என்ன தெரியும் ?

இங்கு
வாழ்ந்து பார்த்தால்
தானே தெரியும் .

தெரிந்து தான்
உருமாறினாயோ
ஔவையே !

அரிது அரிது
கவலை தின்னாமல்
வாழ்தல் அரிது .

நாட்டு நடப்பில்
புத்திசாலி நீ .

உனக்கொன்று என்றதும்
நான்
துடித்தேன் ,
எனக்கொன்று என்றதும்
நீ
நடித்தாய் .

அதையும்

நான் ரசித்தேன் ,

வேறென்ன செய்ய ?

கவலைப்படாதே

நானிருக்கிறேனென்றாய் ,

நிம்மதியாய்

தூங்கியெழுந்ததும்

நீயிருந்தாய் ,

நானெங்கே ?

எத்தனை காலம் தான்

உறவுகள்

நலமென்று

ஏமாந்து திரிவது !

வாலறுத்த பல்லி

ஏமாற்றுவது போல

இழப்பு மீட்டல் திறன்

உனக்கும் உண்டென

நான் கண்டதும்

தலை இழந்து நின்றேனே

நானென்ன சொல்ல ?

மரணிக்கும் வரை

நல்லவனாய் வாழ்வதெப்படி ?

சில காலம்

உன்னைப் போல்

நானும் வாழட்டுமா ?

அதை நீ தாங்குவாயா !

வீழ்ந்து விடுவேனென

நினைத்தாயோ ?

வெட்ட வெட்ட வளரும்

விருட்சம் நான் .

நானொன்றும்

காக்கையல்ல ;

பீனிக்ஸ்  பறவை .

இறைவன்

இந்தப் பாவியோடு

இருப்பதால்

எதையும் செய்ய

எனக்கு ஆற்றல் உண்டு .

காட்டுக்கே செல்லலாமென்றால்

காடு

எங்கிருக்கிறது ?

முடிவு வரும் வரை

ஏமாளியாய்

வாழ்வது

என்னவோ

சற்று

ஏமாற்றம் தருகிறது .

என்னை

புறக்கணித்தவர்களை

நதியும் காற்றும்

செல்வது போல

காலம் செல்லச் செல்ல

மன்னித்து விட்டேன் ,

ஆனால்

மறக்கவில்லை .

மன்னிப்பு :

..................

பெரு மூச்சு விட்ட

காரிருளில்

காலடி

திகைத்து நின்று

மறைந்து போகும்

சுய உணர்வற்ற நிலை .

உள்ளத்திலிருந்து வெளிப்பட்ட

இது வரை

இல்லாத நிலை ,

பல திரைகளுக்கு

மத்தியில்

பதில் இல்லாத கேள்வி .

அவமானப்படுத்தப்பட்ட

அம்மணங்கள்

பணயம் வைத்த பயணங்கள்

எது வரை ?

கடிகாரத்தில்

முட்களிரண்டும்

நேரம் மட்டுமா காட்டும் !

கேள்விக் கணைகள்

கேலி செய்யும் .

அகங்காரம்

அழகாய் ஆடும் போது

அழிவு பின்னே வரும் .

அன்பும் மன்னிப்பும்

நேர் கோட்டுப் புள்ளிகள் .

வானம் பார்த்த
வார்த்தைகள் யாவும்
கவிதைகளற்று
காணாமல் போகும் .

நெஞ்சில் நிறைந்த
கண்ணீர் யாவும்
நினைவுகளற்று
நீர்த்துப் போகும் .

போகும் காலம்
போன போதும்
மறதி ஒன்றே
மன்னிக்கும் .

மன்னிக்கத் தெரிந்த மனசு
மட்டும்
இறைவன் பாதம்
அழகாய்ச் சேரும் .

பழகிய மனிதர்களிடம்
பரஸ்பரம் கொள்கையில்
அவர்களின் நிலை கண்டு
கொதித்துப் போன நேரங்களில்
நானெதைச் சொல்ல
நானென்ன செய்ய ?

நானென்ன செய்ய ? :

.................................

மகிழ்வைச் சொன்னால்

பொறாமைப்படுகிறாய் ,

துக்கம் சொன்னால்

மகிழ்ச்சியடைகிறாய் .

என்

உயர்வு கண்டு

சிறுத்துப் போகிறாய் .

உள்ளும் புறமும்

நஞ்சோடு ,

யாரோடு தோழமை

நெஞ்சோடு ?

பாரதி சொன்னான்

காரி உமிழ்ந்து விடுயென ,

என் மீதல்லவா

திரும்பி வருகிறது

நானென்ன செய்ய !

எதிர் நோக்கும் ஸ்நேகம்

அதனால்

மனசெல்லாம் காயம் .

நாவினாற் சுட்ட வடு
ரணமான நெஞ்சு .

காலம்
மயிலிறகால் மருந்திடும் ,
அதுவரை வேதனை .

சந்தோசம் துக்கம்
ஒன்றாய் நினையென
கண்ணன் மொழி ,
எத்தனை நாள்
தான்
இரு தலைக் கொள்ளி .

போதும்டா சாமி
மனுஷனோடு நட்பு கொண்டு ,
ஆறறிவுக்கும்
கீழானவைகளோடு
நட்பு கொண்டேன் .

நட்பின்
முணுமுணுப்பில்
மயிர்க் கால்களெல்லாம்
பாலூறிய
அதிசயம் ஆனந்தம் .

இயற்கை காயப்படுத்தாது ,

விலங்குகள் புறங்கூறாது ,

அவைகளோடு

புரிதல்

உன்னதம் .

என்ன

வேறுபாடென

யோசித்துப் பார்த்தேன்

உனக்கும் எனக்கும் ?

கீழுள்ள

பெருந் துவாரம்

காந்தலாகி

செத்துப் போவாய் .

நானோ

காற்றோடு காற்றாய்

பூமியெங்கும்

வியாபித்து

பரம சுகமாய்

செத்துப் போவேன் .

மறு ஜென்மம்

மனிதனாய்

பிறக்க ஆசைப்படு .

பாவம்

நீ !

உன்னை

நீ

ஏமாற்றாமல்

உணர்வுகள் புரிந்து

வாழப் பழகு .

இனி

வாழ்வெல்லாம் சுகமே .

ஒரு சிலருக்காக என்னை

மாற்ற முடியாதல்லவா !

என்னிருப்பு :

.....................

என்

நிழல்

நான்

சொல்வதைக்

கேட்பதேயில்லை .

ஏனெனில்

நான்

யாரென்று

தெரிய வேண்டும் உனக்கு ?

பாம்புகள்

தோலுரிக்கும்

அது போல நானும் .

உனக்காக கனவுகளை

என்னில்

புதைத்திட முடியாது ,

உன்னில்

விதைத்திடவும் முடியாது .

மின்மினிப் பூச்சிகள்

ஒளி சிந்தும்

ஒரு நாளும் நிற்காது .

நெல்

நெல்லாக வளரும்

குயில்

குயிலாகக் கூவும் .

காலங்கள் மாறினாலும்

அடிப்படை மாறாது .

என்னியல்பு

தொலையாமல் இருப்பதால்

உனக்கென்ன ஆதங்கம் !

என்

முகவரி

தொலைந்தாலும்

உனக்குத் தெரியும் .

என்னை விட

உனக்கு

என்னை

நன்றாகத் தெரியும் .

பன்றிகளுக்கு

முன்

முத்துக்களை இறைத்தது

என்

தவறு தான் .

ஆனால் துளியாய்

தவமிருந்தேன் சிப்பிக்குள் .

புரிந்தாலும்

புரியாது உனக்கு .

ஏனென்றால்

நானில்லை

நீ .

உன்னோடு

சுற்றித் திரிய

நானொன்றும்

நிலவல்ல , பூமியைச் சுற்ற .

நான்

சூரியன் ,

தனித்தே பிரகாசிப்பேன் .

அது தான்

பிரச்சனையென்றால்

எண்ணங்களை மாற்றி விடு ,

வண்ணங்கள் தானாய் மாறும் .

திருவோடு அல்ல

என்னிதயம் ,

அது

அட்சயப் பாத்திரம் .

என்னுள்ளங்கை என்றும்

கீழ் நோக்கியே ,

இழந்ததென்னவோ ஏராளம் .

தனிமையில்

தான்

தொலைந்து போனேன் .

என்னை நானே

தேடித் தேடி

தொலைந்து போனேன் .

இயல்பு வாழ்க்கையில்

இதையெல்லாம்

சந்தித்துத் தான்

ஆக வேண்டுமென்று

எண்ணிய வேளையில்

என் மகள்

குடும்ப சகிதமாக வந்து

ஆடைகள்

வாங்க இருப்பதால்

பேரங்காடிக்குப் போகலாமா

என்றாள் .

நாங்களும் புறப்பட்டோம் .

காற்றூதிய ஊதல் பை ( பலூன் ) :

...........................................................

ஆயத்த ஆடைகள்

வாங்க

நகரில்

பெரிதாக இருந்த

பேரங்காடிக்குப் போனோம் .

வாசலில்

வண்ண மயமாய்

காற்று ஊதிய

ஊதல் பைகளை

விற்றுக் கொண்டிருந்தார்

ஒருவர் .

இறக்கி விட்டதும்

குடுகுடுவென

ஊதல் பை வியாபாரியை

நோக்கி

என் பேத்தி

ஓடி வந்து நின்றாள் .

நீண்ட

கைப்பிடியுடன்

ஒரு பெரிய ஊதல் பையை

கொடுத்தார் வியாபாரி .

இது வியாபாரத் தந்திரம் .

எப்படியும்

வாங்கி விடுவார்கள்

என்ற நம்பிக்கை .

நம்பிக்கை தானே வாழ்க்கை .

என் பேத்திக்கு

ஆச்சரியமாய்

இருந்தது போலும் ,

விளையாட ஆரம்பித்து விட்டாள் .

நான்

கைப்பேசியில்

நிகழ்பட செயலியை

இயக்கத் தொடங்கினேன் .

என் பேத்தி

அங்குமிங்குமாய்

நகர்ந்து கொண்டிருக்கிறாள் .

நானும்

படம்

எடுத்துக் கொண்டேயிருந்தேன் .

நல்ல பாம்பு

தோற்றுப் போனது .

குடும்பத்தினர் தமக்கான

ஆடைகளைத்

தேர்வு

செய்து கொண்டிருந்தனர் .

என் பேத்தி

செல்லுமிடமெல்லாம்

படமெடுத்துக் கொண்டிருந்தேன் .

நான்

என்

சுயம் மறந்தேன் .

குழந்தைகளோடு

விளையாடுகிறவர்கள்

குழந்தையாகி விடுகிறார்கள் .

மனிதன்

எப்பொழுதுமே

இரட்டைத் தன்மையுடையவன் .

என் கவனமெல்லாம்

நகர்வுப் படமெடுப்பதிலேயே

இருந்தது .

குறுக்குமெடுக்காய்

மக்கள்

நகர்ந்தாலும்

அவர்கள் ஊடாக

இவளும்

சென்று கொண்டிருக்கிறாள் .

அவர்களும் நின்று

வழி கொடுத்து

பின்

தலை தடவி

சிரித்துக் கொண்டே

நகர்கிறார்கள் .

ஒரு சிலர்

கன்னிப் போகும் கன்னம்

கிள்ளி முத்தமிடுகின்றனர் ,

பலர்

நின்று ரசித்து விட்டு

முன்னகர்கிறார்கள் .

இந்த பூமியில் இருப்பவர்கள்

எல்லோருமே

நல்லவர்களாக இருக்கிறார்களே !

அங்கிருந்த

எட்டு வயது சிறுமியுடன்

விளையாடுகிறாள்

என் குட்டி தேவதை .

மகுடியின் நடனத்திற்கு

பாம்பு இயங்குவது போல்

நானும் அசைந்து அசைந்து . . . .

அந்தச் சிறுமியை

பெற்றோர் அழைத்ததும்

அவ்விடம் நகர்ந்தாள் .

என் பேத்தி

ஊதல் பையை தூக்கிப் போட

அடுத்த வரிசையில்

விழுந்து விட்டது .

அவ்விடத்தில்

காற்றூதிய

ஊதல் பை இல்லை .

பாப்பாவின் முகம்

சுருங்கிப் போனது .

கைப்பேசியில் உள்ள

அசைவுப் பட செயலி

மிக நெருக்கமாய்

முகம் நோக்கியது .

மட்டுமல்ல

கண்களையும்

இன்னும் இன்னும் இன்னும்

மிக நெருக்கமாய்

முன் நோக்கியது .

எனக்கோ

சற்று வருத்தம் தான் .

எங்கேயென்று

திகைத்த சமயம்

அந்த

எட்டு வயதுச் சிறுமி

ஊதல் பையை

எடுத்து வந்து கொடுத்தாள் .

ஓ .....

என்று சத்தமிட்ட

என் பேத்தி

சந்தோசத்தின்

எல்லையைத் தொட்டு விட்டாள் .

எனக்கோ

ஒரே ஆச்சரியம் ,

திடீரென ஜீரோ டிகிரியோ

உறைந்து போனேன் .

குழந்தைகளுக்கு

தன்முனைப்பு ( ஈகோ )

இருப்பதில்லை ,

இல்லவே இல்லை .

இந்த உலகத்தில் தான்
குழந்தைகளும்
வாழ்கிறார்கள் !

பார்க்கும்
அசலையெல்லாம்
வார்த்தையாய் நகலெடுக்க
கவிதையும் கை கொடுத்து
உச்சி முகர்ந்தது
மெல்ல .

சிந்தனையை கவிதையாக்கிய
கவிஞன்
தற்பொழுது
என்ன
நிலையில் உள்ளான்
என்றெண்ணிய போது

நானொரு கவி :
............................
வழா நிலையோடும்
வழுவமைதியோடும்
கவி புனையும்
நானொரு
புதுக் கவி .

பா வகையினங்கள்

மற்றும்

அலகிட்டு வாய்ப்பாட்டில்

இலக்கண சுத்தமாய்

எழுதத் தெரிந்த

நானொரு

புதுமைக் கவி .

எனக்கோ

கி . மு . முதல்

கி . பி . வரையுள்ள

கவிஞர்களோடு

போட்டி போடத் தெரியும் .

தெரிந்தும்

வாய்ப்பு தான் கிட்டவில்லை ,

காரணம் பணமில்லை .

ஓலைச்சுவடி என்றால்

எழுத்தாணி போதுமே .

நானெழுதிய படைப்புகள்

கையெழுத்துப் பிரதியாய்

பரண் மேல்

தூங்குகிறது .

குறட்டைச் சத்தம்

தெரு வரை கேட்கிறது .

நூல் போட இயலாமல்

நானோ

நொந்து நூலாகி . . . .

கவிதை சிறுகதை

கட்டுரை புதினம்

என பல்வேறு

முகங்களில் எழுதினாலும்

முகவரி தொலைத்தவன்

ஆனேனே !

காலத்தைக் கரியாக்கினான்

என்ற

என் மனைவியின்

வசைச் சொல்லிலும்

ஒரு

இசை உண்டு

அசை உண்டு .

வருமானம் இல்லாமல்

எழுதிக் கொண்டிருப்பதால்

எப்படி

வரும் மானம் ?

இகழ்ந்தாலும்

முதலில் பாராட்டுவது

அவள் தான் .

என்

முதல் விசிறியும்

அவள் தான் .

இன்னும் எழுது எழுது

என தூண்டுவதும் அவள் தான் .

அவளுக்காகவே எழுதலாம் ,

சிரித்துக் கொண்டே

தலையசைப்பாள் ,

அதுவே போதும்

இலக்கியத்திற்கான நோபல் பரிசு .

தூண்டலும் துலங்களும் அவளே .

இங்குள்ள படைப்பாளிகளில்

ஒரு சிலரைத் தவிர

பெரும்பாலானவர்களை

சாகடித்தது

எமதர்மன் அல்ல ,

தர்மமே இல்லாத

வறுமை .

சேர்ந்தே இருப்பது
வறுமையும் புலமையும் .

பாரதியின்
உலகம் அலாதியானது ,
அது
வறுமையில்
தீய்ந்து போனது .

படைப்பாளி
தன் எண்ணங்களை
பிரசுரிக்க இயலாமல்
பிரசவிக்க முடியாமல்
மரித்துப் போகிறான்
உயிர்
கொண்டலைந்து .

நடுநிலையோடு ,
தான்
கற்றதை பெற்றதை
பிறருக்கு சொல்வதும்
என்
அனுபவத்தின் வழியே
இதைப் பாரென்று
உரைப்பவனே படைப்பாளன் .

எழுத்தாளனின்

படைப்புகள்

சமுதாயத்தைப் புரட்டிப் போட்டு

புரட்சிக்கு

அடித்தளமாக்கும் .

எழுது கோலே

நெம்பு கோலாகும் .

உனக்கென்ன

விரித்து மடக்கி சுருட்டி

எச்சில் தொட்டு

பக்கம் பக்கமாய்

புரட்டிப் போவாய் ,

அடிக்கோடிட்டு

வரிக்குதிரையாக்குவாய் ,

பக்கம் மறக்காமலிருக்க

முனை மடிப்பாய் .

கடைசியில்

குப்பை என்பாய் .

இங்கெல்லாமே குப்பை தான் .

புத்தியுள்ளவர்கள்

கோழியாகலாம் .

கிளறி கிளறி

தனக்கானதைப் பெறலாம் .

படைப்பாளியை தரம் பிரிக்காதே .

காக்கைக்கும் தன் குஞ்சு

பொன் குஞ்சு .

ஆஹா ஓஹோ

அற்புதம் அருமை

என்ற

ஒலிகள் மட்டும்

ஒளி பெறச் செய்யும்

அவனை .

முதலில் எழுத்தாளனை அங்கீகரி .

அவனெழுதிய ஏதாவதொன்று

ஒரு பத்திரிக்கையில்

வெளி வந்தால்

இவ்வுலகில்

மகிழ்வானவன் வேறேனுமல்லன் .

ஏதாவதொன்று பிரசுரிக்கப்பட்டால்

அவனொரு அற்புதப் பிறவி

இல்லையேல் அற்பப் பிறவி .

இரு துருவங்களுக்கிடையில்

அல்லாடி

வாழ்க்கை போகும்

தள்ளாடி .

நச்சென்று எழுதினாலும்

அச்சகம்

புறம் தள்ளும்

பணமில்லையெனில் .

நானோ செய்வதறியாமல் ,

காரணம் பணம் .

அது மட்டுமல்ல

எழுது மை வாங்கக் கூட

பணம் வேண்டும் .

கடன் வாங்கி

அல்லது

பொருள் விற்று

புத்தகம் போட்டு

நாலு காசு பார்ப்பதற்குள்

நாக்கு தள்ளிப் போகும் .

இன்னும்

அவன் அவனை நம்புகிறான் .

சொந்தக் காசில்

சூனியம் வைப்பவன்

எழுத்தாளன்

மட்டுமே !

வெற்றி பெற்றால் கொண்டாடும்

தோல்வியெனில் கீழே போட்டு

மிதி மிதிக்கும் ,

எழுத்தாளன் என்றால்

இன்னும்

ரெண்டு மிதி சேர்த்து மிதி .

எழுத்தை நேசிப்பது மட்டுமல்ல

வாசிப்பதும்

சுவாசிப்பதும்

ஆரோக்கியமான

உலகை உருவாக்கும் .

இலக்கியங்கள்

எங்கு

குறைந்து வருகிறதோ

அங்கு

இலட்சியங்கள்

குறைந்து வரும் ,

பாவங்கள் பெருகி வரும் .

கலைஞனை

கை கொடுத்து

தூக்கி விட வேண்டாம்

விரல் பிடித்தாவது

தூக்கி விடலாமே !

கொண்டாடினாலும் தூற்றினாலும்

மீண்டும் மீண்டும்

எழுத ஆசைப்படும்

ஒரே ஜீவன்

படைப்பாளன் மட்டுமே .

சிரங்கு உள்ளவன் சொறியாமல்

இருப்பானா

பேனா உள்ளவன் எழுதாமல்

இருப்பானா !

இன்றைய நாளில்

எழுத்தாளர்கள்

திரி சங்கு சொர்க்கமாய் . . . .

இருப்பினும்

எழுதுவது என் வேலையல்ல ,

இதை

சற்று கர்வமாகவே

சொல்லலாம் .

சூழலில் ஏற்படும்

சலனங்களை

நெறிப்படுத்தினாலே போதுமானது .

எழுத்து எழுந்து நின்று

வலுத்து நிற்கும் .

எழுத்தாளன்

என்பவன்

தன் வாழ்வை விட

இந்தச் சமூகத்தை

அதிகம் நேசிப்பவன் .

அதனால் தான்

அவன்

அதிகம் வெறுக்கப்படுகிறான் .

அழகியல் அரசியல்

அகம் புறம்

ஆன்மீகம் நாத்திகம்

இயற்கை மருத்துவம்

வானவியல் பண்பாடு

நாகரிகம்

இவை யாவையும்

கவிஞன் பாடினான்

பண்ணோடு .

தன் கவிதை மூலமே

இறந்த கால கதை சொன்னான்

கவிஞன் .

உலகத்தின் கண்ணாடி

கவிஞன் .

எதையெல்லாம்

நினைக்கத் தோன்றுகிறதோ

அதையெல்லாம்

எழுதத் தோன்றும் .

இன்றே இப்பொழுதே

என் கையெழுத்தை

வாங்கிக் கொள் .

நாளை

என்னை திமிர் பிடித்தவன்

என்று கூறக் கூடாது .

இருந்தாலும்

இலக்கிய உலகில்

நானும்

ஒரு கவிஞன் .

மறுநாள்

இலங்கை வாழ்

நண்பர்களிடமிருந்து

கொஞ்சு தமிழில்

தொலைபேசி

அழைப்பு வந்தது .

அவர்களைக் காண

முகாம்

சென்றேன் .

முகாம் எங்கிலும்

கலப்பில்லா

தமிழ் .

அவர்களின் உரையாடலில்

மீண்டும்

இலங்கைக்குச் செல்லலாமா

என்ற பேச்சு எழுந்தது .

புலம் பெயர்ந்தவர்களை

இலங்கைத் தாய்

எவ்வாறு

அழைப்பாள் ! ?

புலம் பெயர்ந்த தமிழா ! :

........................................

உன்னைத் தாங்கியது

தாய் ,

உன்னையும் அவளையும்

தாங்கிய என்னை

மறந்து விட்டாயா

புலம் பெயர்ந்த தமிழா !

புத்தனின் கண்களில்

இரத்தம் வழிந்தது

சில காலம் ,

அதற்காக

என்னை மறந்திடுவாயா

மண்ணை மறந்த தமிழா !

ஊன் கிழித்த

புத்தனின் பல்லில்

துர்நாற்றம் வரும் .

பின் மாற்றம் வரும்

அதன் பின்

நாற்றம் வரும் .

பௌத்த விகாரங்களில்

விகாரங்கள் இல்லை .

ஆறுதல்

நான் தருவேன்

சீக்கிரம்

வந்து விடு

உலை கொதிக்கும்

தவிப்போடு .

வேறெங்கு

பதியம் போட

உன் வேர் இங்கிருக்க .

நீ

பேசும்

தமிழ்

கேட்டு நாளானது .

கண்டம் விட்டு கண்டம் தாண்டும்

பறவைகள் கூட

தாயகம் திரும்பும் ,

சந்ததிகள் முன் செல்லும்

அற்புதம்

பறவைகளுக்கு

மட்டும் தானா ?

இங்கே

நீ

இழந்தது

ஏராளமாய் இருக்கலாம் ,

ஆனால் வேறு மண்ணில்

தாராளமாய்

நீ

தொலைந்து போகாதே .

தனிமையிலும் இனிமையிலும்

யாருமறியா

உன் குரல்

மெல்ல ஒலிப்பதை

நானறிவேன் ,

என் கூக்குரல்

நீ அறிவாயா ?

குறிஞ்சி முல்லை

மருதம் நெய்தல்

இவை

யாவும்

நீயின்றி பாலையானது .

உன் காலடியில் மிதிபடும்

மண்ணில் கூட

காவியம் பூக்கலாம் .

பூவாக அல்ல
மஞ்சரியாக .

நிகழ்கால அரிதாரம் பூசிய
ஆனந்தத்தில்
முகங்களை
இழந்து விடாதே .

இறந்த கால
நினைவுகளும்
எதிர் கால
ஏக்கங்களும்
உனக்கு
மட்டுமல்ல ........

பெங்குவின்
கண்டத்தில் மட்டும் வாழாதவனே ,
எல்லா பண்பாட்டையும்
கற்றுக் கொள் ,
ஆனால்
சுயத்தை மறவாதே .

விடிகாலை
கனவு பலிக்குமென
காத்திருப்பது
நானும் தான் .

விழுந்தாலும் வீழ்ந்தாலும்

உன் நினைவெல்லாம்

இங்கு தானே ?

தென் கிழக்கு மூலையில்

அக்னியின் தாக்கமில்லை .

இதுகாறும் புலம்பி விட்டேன்

புறப்பட்டு வா ,

வந்ததும்

பொரணி பேசலாம் .

எவ்வளவோ இருக்கிறது

கதைப்பதற்கு .

அலை உரசும் கரையோரம்

கால் கடுக்க

காத்திருந்து

உப்பேறிப் போனது .

அலையின் ஓசையில்

நிதமும்

கடல் நோக்குகிறேன்

புலம் பெயர்ந்த தமிழா

நீ

வருவாயென !

இலங்கைத் துயரம்

கேட்டு

மனம் ரணமாகிப் போனது .

காலம்

மருந்திடும் , துயர் துடைக்கும்

தற்காலிகமாக .

இலங்கையில் நடந்த

கொடுமையை நினைத்து

வீடு திரும்புகையில்

குப்பையோரம்

படுத்திருந்த

ஒரு பிச்சைக்காரரைப் பார்த்தேன் .

பசி

உயிரினங்களின்

இயல்பூக்கமாகும் .

உயிரினங்களின்

ஒட்டு மொத்தப் போராட்டம்

பசியில் தொடங்குகிறது .

வேட்டைச் சமூகத்தில்

உணவு

பங்கிடப்பட்டது .

இனக்குழுச் சமூகத்தில்
உபரி உணவு
செல்வமாகக் கருதப்பட்டது .

இடுப்புக்கு
மேலேயும் கீழேயும் ஏற்படும்
பசியின் தாக்கத்தால்
பாவங்கள்
வளர ஆரம்பித்தது .

வளர்சிதை மாற்றத்தால்
உயிரினங்கள்
வளர்ச்சி அடைகிறது .

நாகரிக சமூகத்தில்
கொடுப்பவன் பெறுபவன்
ஈதலும் இரத்தலும்
ஏற்றத் தாழ்வை
உண்டாக்கியது .

வாழ்வின் சுழற்சியில்
பசியே பிரதானம் .

பழங்காலத்தில் பிச்சை எடுத்தல்
இரண்டாவது
முக்கியத் தொழிலாகும் .

பிரம்மனின் கபாலம்

சிவன் கையில்

அதுவே

பிச்சைப் பாத்திரம் .

எமன் காலில் ஊனம்

ஏற்பட்டதால்

சனீஸ்வரன்

பிச்சை எடுக்கும்

நிலை ஏற்பட்டது .

புத்தரும்

மஹா பிக்கு

என்றே அழைக்கப்படுகிறார் .

பிக்கு பிக்குணி

மரியாதைக்குரிய சொல் .

சமஸ்கிருதத்தில்  " பிக்ஷா "

என்றால்

"பிச்சை எடுத்தல்" .

ஒரு மொழியில்

சொல்லொன்று இருந்தால்

செயலொன்று இருக்கும் .

இங்கு அதுவல்ல காரியம்

சொல்லா செயலா

என்பதே முக்கியம் .

அப்படியென்றால்

பிச்சை எடுத்திருக்க வேண்டும் .

வடக்கில்

அது உயர்வான செயல்

தெற்கில்

இது இழிவான செயல் .

பொதுவாக

உலகமெங்கிலும்

அருவருக்கத்தக்கச் செயல் .

மடிப்பிச்சை என்பது

ஆன்மீகத்தில் நேர்த்திக் கடன் .

பிச்சையெடுத்தல்

தன் கௌரவம்

அழித்த செயல் .

வள்ளுவர்

இரவு  என்றே ஓர் அதிகாரம்

இயற்றியிருக்கிறார் .

இரத்தல்

ஆதி காலம் தொட்டு

இருந்திருக்கிறது .

யோகி ராம் சுரத் குமார்

பிச்சைக்காரன்

என்றே

தன்னை

அறிமுகப்படுத்துவார் .

ஞானிகளுக்கும்

துறவிகளுக்கும்

தபஸ்விகளுக்கும்

இது சாலப் பொருந்தும் .

பழங்கால நாகரிகங்களில்

கூட

பிச்சையெடுத்தல் உண்டு .

முதிர்ச்சியால் ,

இயலாமையால்

தானம் வாங்குவது

அல்லது

பிச்சை எடுப்பது

கூட தவறானதல்ல .

ஆனால்

இளமையில் வறுமையில்

இரப்பதை விட இறப்பதே மேல் .

வா

நான் வேலை தருகிறேன்

என்றால்

ஒரு சிலரைத் தவிர

எவனும் வரமாட்டான் ,

காரணம் சோம்பேறித்தனம் .

மனிதாபிமானத்தை

இரக்கத்தை

விலையாகக் கேட்கும்

செயல் .

பிச்சை எடுப்பதை

சமூகம்

சார்ந்த கண்ணோட்டமாக

அல்லாமல்

மனம்

சார்ந்த நிலையாகக்

கவனித்தால்

இரக்கம் ஏற்படும் .

பிச்சைக்காரர் :

...........................

குப்பையில்

வயோதிக பிச்சைக்காரர்

ஒருவர்

தலைக்கு

கை வைத்து படுத்திருந்தார் .

அவரைப் பார்த்ததும்

அவர்

காலத்திய நிகழ்வுகளில்

மனம்

ஒன்றிப் போனது .

அழகாகப் பிறந்திருப்பார்

எள்ளலோடும் துள்ளலோடும்

இளமைப் பருவம் கடந்திருக்கும்

திருமணமும்

குழந்தைப்பேறும்

அருமையாய் கழிந்திருக்கும் .

அவரும்

பிச்சைக்காரர்களைப் பார்த்திருப்பார்

பிச்சை போட்டிருப்பார்

அல்லது மறுத்திருப்பார் .

அவர்களைப் பற்றி

என்ன மதிப்பீடு

கொண்டிருப்பார் ?

வாழ்வின்

சுழலில் சூழலில்

தடமாறியிருப்பாரோ ?

வறுமையோ

சந்ததியின் வெறுப்போ

புறந்தல்லலோ ?

அப்படியெனில் காரணமென்ன ?

இயலாமையா

சோம்பலா

சமூக விரோதக் கும்பலின்

சதிச் செயலா

வியாபாரமா ?

நம்மைப் பற்றி

சுய பரிசோதனை

செய்வோமா ?

நாமும் பிச்சை

அடிக்கடி எடுக்கிறோமே ?

அதைப் பற்றி

என்றாவது

ஒரு நாள்

யோசித்திருக்கிறோமா ?

எதற்கெல்லாம்

நாம்

பிச்சை எடுக்கிறோம் ?

தாஜா பம்மாத்து

பந்தா செல்வாக்கு

தன்னிருப்பை உறுதி செய்தலில்

தேவைகளைப்

பூர்த்தி செய்வதில்

நாகரிக உடையணிந்து

இனிய சொல் பிரயோகத்தில்

எங்காவது

ஓர் இடத்தில்

பிச்சையெடுக்கிறோம்

என்பதை நினைத்தால்

இயல்பாய் வாழவில்லை ,

அசிங்கமாக வாழ்கிறோம்

என்பதை

நினைக்கும் பொழுது

கண்ணோரத்தில்

ஒரு துளி உப்புக் கரிக்கிறது .

பிச்சையெடுத்தல் என்பது

உணர்வைக் கொன்று

உடல் சுமந்த நிலை .

மொத்தத்தில்

தன்

சுயம்

அறுத்த நிலை .

அன்று பகல் முடிந்து

உணவுண்ண

வீடு திரும்புகையில்

யாரோ

ஒருவரின் இறுதி ஊர்வலம்

வந்து கொண்டிருந்தது .

கால்களில் மிதிபடும்

பூக்கள்

இராகு காலத்தில்

பூத்ததோ ?

சிரித்தது அழகாய்

புகைப்படம் .

சுவரொட்டி சொல்லியது

கண்ணீர் அஞ்சலி .

அதைப் பார்த்ததும்

நமக்கு யார்

கண்ணீரஞ்சலி எழுதுவார்கள் ?

தெரியாது !

நமக்கு நாமே எழுதினால் என்ன ?

கண்ணீரஞ்சலி :

...........................

காலம் முழுவதும்

கற்பனையில் மூழ்கி

ஆசையாய்

இசை பருகி

உனை மறந்தாய் .

எழுதாத கவிதைகளின்

அற்புத வரிகளுக்கு

சொந்தக்காரன் .

விழிகளின் மொழிகளில்

விடியலை இழந்து

இன்பங்களை

தேடித் தேடி

அனுபவித்தாய் .

கரைந்து

கரைந்து

காணாமல் போனாய் .

கேள்விகளே

வேள்விகளாய்

அவிந்து போனவன் .

சாட்சியாய் இல்லாமல்

வேடிக்கை பார்த்தவன் .

தேடாமல்

தொலைந்ததைக் கண்டவன் .

நொடிப் பொழுதில்

மரணத்தின்

ஒத்திகையை

எதிர்க்க முடியாமல்

ஏற்றுக் கொண்டவன் .

கடவுளைப் பற்றி

விவாதித்து

கனிவோடு கவனித்தவன் .

அறிந்தது ஏராளம்

அளித்தது தாராளம் .

ஆதியும் அந்தமும்

ஆனவனே ,

அந்தாதி ஆனவனே .

வாழ்விற்கும் இறப்பிற்கும்

விளிம்பின்

மதில் மேல் பூனையாய் . . .

வாழ்வைப் புரிந்து கொண்டவனே

சாவதற்குத் தகுதியானவன் ,

அதற்கு

நீ

ஆயத்தமானவன் .

வந்து சென்ற காலம்

கொஞ்சம் ,

வாழ்ந்து சென்ற காலம்

கொஞ்சும்.

பிறப்பும் இறப்பும்

ஒன்றென ரசித்தவன் .

உனக்கு நீயே

கண்ணீரஞ்சலி

எழுதியவன் .

என்னை முழுமையாய்

உன்னிடம்

ஒப்படைக்கிறேன் ,

ஓ ....

மரணமே

என்னை

என்ன செய்வதாய்

உத்தேசம் !

ஏகாந்தத்தில்

சிரிப்பவனே

உனது

பிறப்பின் ரகசியம்

பூர்த்தியானது .

இனியொரு

பிறவி

இனியேதுமில்லை .

எல்லாம் நிறைவேறிற்று .


இன்னும்
ஒரு கவிதை கூட
எழுதவில்லை
கவிஞர் என்ற அடைமொழியோடு . . .
செள பீ . தாமஸ்.